**Tamil Nadu Pollution Control Board**

**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY COVERING EXTENT OF 4.42.0 HA FOR M/S. SAHARA ULTRA PRIVATE LIMITED AT S.F.NO. 91/1B, 91/1C, 91/1D(P), 91/1E, 91/1F(P), 92/1B, 92/1C, 92/1D, 92/1E, 92/1F, 95/1C IN KARUNSAMIGOUNDANPALAYAM VILLAGE, MADUKKARAI TALUK, COIMBATORE DISTRICT AND THIRUMATHI.S.MAHESHWARI COVERING EXTENT OF 1.75.5 HA AT S.F.NO.95/3B1 & 100/4 IN KARUNSAMIGOUNDANPALAYAM VILLAGE, MADUKKARAI TALUK, COIMBATORE DISTRICT AT M/S. SHREE GANAPATHY MAHAL, BODIPALAYAM ROAD, MADUKKARAI MARKET, MADUKKARAI TALUK, COIMBATORE DISTRICT ON 26.05.2025 AT 11.00 A.M.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Tmt.K. Senthil Vadivu | : | **Special District Revenue Officer (Land Acquisition) Highways Coimbatore District** |
| 2. | Dr. R. Chandrasekaran | : | **District Environmental Engineer** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 3. | Thiru.S.Senthil Kumar | : | **Assistant Environmental Engineer,** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 4. | Thiru.M.Sheik Nawas | : | EIA Consultant **M/s. Geo Exploration and Mining Solutions, Salem** |
| 5. | Public | : | 62 |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South has welcomed the District Revenue Officer, the public and the quarry owners According to the 2006 Environmental Impact Assessment Notification of the Ministry of Environment, Forest and Climate Change, it is necessary to obtain prior environmental clearance for 8 types of industries, and while obtaining such prior environmental clearance, it is a rule to hear the views of the public and record it and submit it to the State Environmental Impact Assessment Authority. Accordingly, he informed that the details of this public hearing meeting had already been published in the Tamil and English dailies, Dinamalar and The New Indian Express respectively on 22.04.2025 and the Environmental Impact Assessment Report and Project Summary were placed for public at the necessary Government offices. Further, the information about this meeting has been announced through Flex boards at two prominent places in the village and handouts have been distributed to the publicThe photographs of which are given here. He further informed that on behalf of the quarry owners, the project consultant will explain the details of Rough Stone and Gravel Quarry to the public and after that, the public will be asked to record their views regarding the project. The entire hearing is recorded and audio and video recorded and the proceedings and notes of this meeting will be Submitted to the Tamil Nadu State Environmental Impact Assessment Authority.

The District Revenue Officer inaugurated the public hearingmeeting and said that the purpose of the meeting is to record the environmental comments raised by the public. The project consultant of the rough stone and gravel quarry project gave a presentation on the proposed ordinary rough stone and gravel quarries.

Following this, the Environmental Impact Assessment Consultant of the Rough Stone and Gravel Quarry, Mr. M. Sheikh Nawas, Geo exploration and Mining Solutions Salem, welcomed everyone and gave a detailed explanation through a video presentation about the proposed Rough stone and gravel quarry project and the environmental management plan to be implemented during its operation.

Then, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South, said that the public's comments on the rough stone and gravel quarry project, will be recorded and submitted to SEIAA.

Accordingly, the public recorded their following comments and suggestions.

1. **Thiru.Mathan Mohan, Madukkarai :**

Hello everyone. My name is Madhan. I come from Madukkarai. I am doing building contract work. Our business will be improved if quarry is permitted.

2. **Thiru. Kannan, Palathurai :**

I am Kannan from Palathurai. I am selling building material. Now when permission is given for stone quarry, I will buy material at low cost from them and sell for profit. when there is a delay in getting approval,. I am taking stone from Pollachi and Udumalai. Due to which the transport cost is getting more. Hence, material cost is increased.

3. **Thiru.Kanagaraj, Nachipalayam**

My name is Kanagaraj. I come from Nachipalayam. I am a wheel loader operator. I need this because my job opportunities will be higher if I have a crusher and quarry like this.

4. **Thiru.Kaliyappan, Madukkarai:**

Sir, Hello Everyone. I have a lorry. I get more stone only If quarry is operated. Now, the price of the material is high because we bought from farther villages. If we get it nearby, it will be a useful for us.

5. **Thiru.Easwaran, Madukkarai:**

My name is Easwaran. The public opinion is that if this stone quarry is started in this village, all the material will be available at a slightly cheaper rate. Thank you.

6. **Thiru.Zahir Hussain, Madukkarai:**

My name is Zahir Hussain. I come from Madukkarai. Since I am driving a lorry, my job opportunities will be a little more and my livelihood will be a little better.

7. **Thiru.Karthik Krishnan, Madukkarai:**

Hello. I am the president of the Kattampatty Agriculture Youth Association. If you see the benefits of this stone quarry, last year there was a severe drought. In the summer, we took water from this quarry and saved a lot of coconut trees. We also poured it to nearby banana plantations. This project has no adverse impact. It is beneficial.

8. **Thiru.Thambiraj, Pachapalayam:**

My name is Thambiraj. I am from Pachapalayam village. We have a lorry. We bring all the stones from outside and supply to public and crushers. I would like to inform you that since it is nearby, building materials are available at a low cost.

9. **Thiru.Saravana Kumar, Palathurai:**

Hello everyone. My name is Saravana Kumar. I come from Palathurai. I have a paver block unit . If these quarries are operational, I will get the material at a reduced cost because it is nearby. I can reduce the rate for the public. I think that my livelihood will be better. Thank you.

10. **Thiru. Saravana Kumar, Palathurai:**

I am Saravana Kumar. I am from Palathurai. I have a grocery shop. If you give them a license, more vehicles come. With that, my livelihood will be better. There are hotels nearby. They will also buy materials. My business will be better. Thank you.

**11. Thiru.Velliyangiri, Palathurai:**

I am coming from Palathurai. Since all these stone quarries are functioning, a person named Maheshwari is giving free materials to the construction of group houses. Since, the stone quarries are not functioning, there is a little difficult for them. They will also supply all the materials at a lower price. Now all activities are standstill. . About fifty people were working in that quarry. They are unemployed and are struggling, now . That is why I request to open the quarry and request to operate without impact on the surrounding environment.

**12. Thiru.Thangavel, Madukkarai:**

My name is Thangavel, Supervisor. I am in the construction business. I have come from a village. When I took material at low cost. from them and worked, I got it at a slightly lower cost previously. Now the material is available on high cost. Due to non availability of material, my supervisor position is downgraded as labour. . I have to go to work as a wage laborer.Our livelihood is affected. I request that a quarry shall be opened at earliest.

**13. Thiru. Mohana Sundaram, Nachipalayam:**

My name is Mohana Sundaram. I am from Nachipalayam. My opinion is that this quarry will bring great benefits to the poor and the labours. That is why I solemnly state that I have no objection to the operation of this quarry.

**14. Thiru.Govindaraj, Palathurai:**

My name is Govindaraj. I come from Palathurai. I own a lorry. If there is a quarry here, there is no problem in taking materials from here and supplying it locally.

**15. Thiru. Vellayangiri, Palathurai**

I come from Palathurai. Since this quarry is not operating, the construction of group houses will be affected. They all belong to an honest family. They supply building material at free cost without any compromise to construct group houses without expecting anything for last sixty to seventy years. Not only here, but wherever temples, ponds and houses are built

in Madukkarai union, if we go and ask, they supply building material for free. They provide all the raw materials for that. Therefore, I humbly request to issue license without any harm to them.

The list of participants in the above public hearing meeting, the video and audio recording and are being sent to the State Environmental Impact Assessment Authority.

At the end of the meeting, the District Environmental Engineer thanked, the District Revenue Officer who chaired this public hearing Police Officials, and public who registered their opinions, on behalf of the District Administration and the District Environmental Engineer, Thank you and greetings. He thanked everyone

**No. of Petitons : 8**

3/6/25

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Coimbatore South.**

03/06/2025

**Special District Revenue Officer,**
**(Land Acquisition) State Highways,**
**Coimbatore District**

9

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், கருஞ்சாமிகவுண்டன்பாளையம் கிராமத்தில் கா.ச.எண். 91/1B, 91/1C, 91/1D(P), 91/1E, 91/1F(P), 92/1B, 92/1C, 92/1D, 92/1E, 92/1F, 95/1C -ல் 4.42.0 பரப்பளவில்அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். சஹாரா அல்ட்ரா பிரைவேட் லிமிடெட் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், கருஞ்சாமிகவுண்டன்பாளையம் கிராமத்தில் கா.ச.எண். 95/3B1 & 100/4-ல் 1.75.5 பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திருமதி.S.மகேஸ்வரி மேற்காணும் திட்டங்களுக்கு கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், மதுக்கரை மார்க்கெட் பகுதியில் அமைந்துள்ள தி/ள். கணபதி மஹாலில் 26.05.2025 அன்று காலை 11 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக்கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி. K. செந்தில் வடிவு | : | தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்பு) மாநில நெடுஞ்சாலை கோயம்புத்தூர் மாவட்டம் |
| 2. | Dr.R.சந்திரசேகரன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 3. | திரு.S.செந்தில்குமார் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 4. | திரு.M.ஷேக் நவாஸ் | : | திட்ட ஆலோசகர், ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம் |

| | | | |
|---|---|---|---|
| 5. | பொதுமக்கள் எண்ணிக்கை | : | 62 |

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், கருஞ்சாமிகவுண்டன்பாளையம் கிராமத்தில் க.ச.எண். 91/1B, 91/1C, 91/1D(P), 91/1E, 91/1F(P), 92/1B, 92/1C, 92/1D, 92/1E, 92/1F, 95/1C -ல் 4.42.0 பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். சஹாரா அல்ட்ரா பிரைவேட் லிமிடெட் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், கருஞ்சாமிகவுண்டன்பாளையம் கிராமத்தில் கா.ச.எண். 95/3B1 & 100/4-ல் 1.75.5 பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திருமதி.S.மகேஸ்வரி ஆகிய மேற்கூறிய குவாரி திட்டங்களுக்கு மத்திய சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துகொள்ள மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பொதுமக்களையும் மற்றும் குவாரி உரிமையாளர்களையும், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு அலுவலக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 2006 ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் படி 8 வகையான தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பது அவசியம் என்றும், அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும் போது பொது மக்களின் கருத்துக்களை கேட்டு அதை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்பது விதியாகும். அதன்படி இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களான முறையே தினமலர் மற்றும் **நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்** ஆகிய நாளிதழ்களில் **22.04.2025** அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததையும் மற்றும் தேவையான அலுவலகங்களில் பொது மக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம்

வைக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தார். மேலும், இந்த கூட்டம் நடைபெறவுள்ள தகவலை கிராமத்திலுள்ள முக்கியமான இரண்டு இடங்களில் விளம்பர பலகை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது மற்றும் துண்டு பிசுரங்கள் மூலம் பொது மக்களிடம் வழங்கப்பட்டுள்ளது, இதனுடைய புகைப்படங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டம் தொடர்பாக குவாரி உரிமையாளர்களின் சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் சாதாரணக் கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்க உரை பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும் அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்களை பதிவு செய்யுமாறு இவை அனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்துள்ளார்.

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார் அவர் பொதுமக்கள் எடுத்துரைக்கும் சுற்றுச்சூழல் சம்பந்தமான கருத்துக்களை பதிவு செய்வது கூட்டத்தின் நோக்கம் என்று கூறினார். பின்னர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் திட்ட ஆலோசகரால் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிகள் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினர்.

அதனை தொடர்ந்து சாதாரண கல் மற்றும் கிராவல்குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் திரு.M.ஷேக் நவாஸ் ஜியோஎக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ் சேலம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்து அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல்குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும்

இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்க காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்ககாட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனவும் அவை வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் கூறினார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்தனர் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

1. **திரு. மதன் மோகன் மதுக்கரை :**

எல்லோருக்கும் வணக்கம். என் பெயர் மதன். மதுக்கரையிலிருந்து வருகிறேன். நான் கட்டிட ஒப்பந்தம் எடுத்து தொழில் செய்து கொண்டிருக்கிறோம் . இந்தப் பகுதியில் இந்த சுரங்கம் வருவதன் மூலம் எங்கள் தொழில் வளம் மேம்படும்.

2. **திரு.கண்ணன் பாலத்துறை :**

நான் கண்ணன் பேசுகிறேன். பாலத்துறையிலிருந்து வந்திருக்கிறேன். நான் கட்டுமான பொருட்கள் விற்பனை கொண்டிருக்கிறேன். இப்போது கல் குவாரிக்கு அனுமதி கொடுக்கும் போது, சந்தை விலையிலிருந்து குறைவாக வாங்கி என்னால் விற்பனை செய்ய முடியும். ஏனென்றால் இப்போது அனுமதி கிடைப்பதற்கு தாமதம் ஆகும் போது நான் பொள்ளாச்சி, உடுமலையிலிருந்து கல் எடுத்துக்

கொண்டிருக்கிறேன். அதனால் போக்குவரத்தின் செலவு அதிகமாக உள்ளது. அதனால் கட்டுமான பொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

3. **திரு.கனகராஜ் நாச்சிபாளையம்:**

என் பெயர் கனகராஜ். நான் நாச்சிபாளையத்திலிருந்து வருகிறேன். நான் வீல் லோடர் ஆபரேட்டரா இருக்கிறேன். கிரஷர், குவாரி புதிதாக துவங்கவதினால் எனக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது. அதனால் எனக்கு இது தேவைப்படுகிறது.

4. **திரு.காளியப்பன் :**

ஐயா, அனைவருக்கும் வணக்கம். நான் லாரி வைத்திருக்கிறேன். அதனால் கனிமம் உடைத்தால் தான் கல் கிடைக்கும். இப்போது தூரத்தில் இருந்து வருவதால் பொருட்களின் விலை அதிகரிக்கிறது. எனவே, குவாரிகள் அருகில் இருந்தால் எங்களுக்கு சலுகையாக இருக்கும்.

5. **திரு.ஈஸ்வரன் :**

என் பெயர் ஈஸ்வரன். இந்த கிரமாத்தில் இந்த கல் குவாரி தொடங்கினால் அனைத்து கட்டுமான பொருட்களின் விலையும் குறைவாக கிடைக்கும் என்பது பொதுமக்கள் கருத்து. நன்றி வணக்கம்.

6. **திரு.ஜாஹிர் ஹுசேன் மதுக்கரை :**

என் பெயர் ஜாஹிர் ஹுசேன். நான் மதுக்கரையிலிருந்து வருகிறேன். நான் லாரி ஓட்டிக் கொண்டிருப்பதினாலே வேலை வாய்ப்பு கொஞ்சம் அதிகமாக இருக்கும் வாழ்வாதாரம் மேம்படும்.

7. **திரு.கார்த்திக் கிருஷ்ணன்** :

வணக்கம். என் பெயர் கார்த்திக், குமிட்டிபதி விவசாய இளைஞர் அணி சங்கத் தலைவராக இருக்கிறேன். இந்த கல் குவாரியினாலே நன்மை என்னவென்றால் கடந்த வருடம் கடுமையான வறட்சி. கோடை காலத்தில் இங்கிருந்து தண்ணீர் எடுத்து பல தென்னை மரங்களை காப்பாற்றினோம். அருகிலுள்ள வாழைகளுக்கும் ஊற்றினோம். இதனால் இந்த திட்டத்தினால் எந்த பாதிப்பும் இல்லை. நன்மைதான்.

8. **திரு.தம்பிராஜ்** :

என் பெயர் தம்பிராஜ். பச்சாபாளையம் கிராமத்தில் இருக்கிறேன். நாங்கள் லாரி வைத்திருக்கிறோம். வெளியில் இருந்து தான் கல்லெல்லாம் எடுத்து கொண்டுவந்து கட்டிட வேலை மற்றும் கிரஷர் எல்லோருக்கும் கொடுக்கிறோம். குவாரி அருகில் இருந்தால் கட்டுமான பொருட்கள் குறைவான விலையில் கிடைக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

9. **திரு.சரவண குமார் பாலத்துறை** :

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் சரவணகுமார். பாலத்துறையிலிருந்து வருகிறேன். நான் ஒரு பேவர் பிளாக் கம்பெனி வைத்திருக்கிறேன். அதனால் எனக்கு இந்த குவாரிகள் அருகிலிருந்து செயல்படுவதால் கட்டுமான பொருட்கள் குறைவான விலையில் கிடைக்கும். நானும் பொதுமக்களுக்கு குறைவான விலையில் விற்பனை செய்யலாம். இதனால் என்னுடைய வாழ்வாதாரம் கொஞ்சம் நல்லா இருக்கும் என்று யோசிக்கிறேன். நன்றி.

10. **திரு.சரவண குமார் பாலத்துறை :**

என் பெயர் சரவணகுமார். பாலத்துறையிலிருந்து வந்திருக்கிறேன். நான் மளிகை கடை வைத்திருக்கிறேன். இவர்களுக்கு கிரஷர் லைசென்ஸ் கொடுத்தீர்கள் என்றால் வாகனமெல்லாம் அதிகமாக வரும். அதை வைத்து எனது வாழ்வாதாரம் மேம்படும். அருகிலேயே உணவகமும் இருக்கிறது. அவர்களெல்லாம் பொருட்கள் வாங்குவார்கள், அதை வைத்து எனது வணிகம் மற்றும் தொழில் நன்றாக இருக்கும் ஐயா . நன்றி.

11. **திரு.வெள்ளயங்கிரி பாலத்துறை :**

நான் பாலத்துறையிலிருந்து வருகிறேன். இந்த கல் குவாரியெல்லாம் இயங்குவதனால மஹேஸ்வரி என்பவர் தொகுப்பு வீடுகளுக்கு கிட்டத்தட்ட ஒரு நூறு வீடுகளுக்கு இலவசமாக பொருட்கள் கொடுத்து வர்றாங்க. இப்போது கல் குவாரியெல்லாம் இயங்காததால் அவர்களுக்கு சற்று சிரமமாக உள்ளது. மேலும், கட்டுமான பொருட்கள் எல்லாம் குறைந்த விலையில் விற்பனை செய்வார்கள். இப்போது அதெல்லாம் முடங்கி கிடக்கிறது. பொது மக்கள் ஐம்பது பேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். தற்போது முற்றிலுமே வேலை இல்லாமல் திண்டாட்டமாக உள்ளது. அதனாலே அவர்களுக்கெல்லாம் கல்குவாரி இயங்கும் படி செய்து கொடுக்கவேண்டுமென்றும் சுற்றுப் புற சூழ்நிலைக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் இயக்கும்படி கேட்டு கொள்கிறேன்.

12. **திரு.தங்கவேல் :**

என் பெயர் தங்கவேல், மேஸ்திரி. நான் கட்டிடத் தொழில் செய்கிறேன். சாவடியிலிருந்து வந்திருக்கிறேன். இவர்களிடமிருந்து பொருட்கள் எடுத்து வேலை செய்த போது குறைவான விலையில்

கிடைத்தது . இப்போ பொருட்கள் கிடைப்பது சற்று சிரமமா உள்ளது. ஆட்கள் வைத்து வேலை செய்யும் மேஸ்திரி நான். நானே தற்போது கூலிக்கு போகிற சூழ் நிலைக்கு வந்து விட்டது. எங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கிறது. எங்களுக்காக கொஞ்சம் கல் குவாரி அனுமி தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

13. **திரு.மோகன சுந்தரம் நாச்சிபாளையம் :**

என்னுடைய பெயர் மோகன சுந்தரம். நான் நாச்சிபாளையத்தை சார்ந்தவன். இந்த குவாரியினாலே ஏழை எளிய மக்களுக்கு, கூலி தொழிலாளர்களுக்கு ஒரு பெரிய நன்மை ஏற்படும் என்பது என்னுடைய கருத்து. அதனால் இந்த கல் குவாரி செயல்படுவதில் எனக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை என்பதை ஆணித்தரமா சொல்கிறேன்.

14. **திரு.கோவிந்தராஜ் பாலத்துறை :**

என் பெயர் கோவிந்தராஜு. பாலத்துறையிலிருந்து வருகிறேன். நான் லாரி வைத்திருக்கிறேன். இங்கே குவாரி இருந்தால் இங்கேயே கல் எடுத்து உள்ளூரில் விற்பனை செய்ய எந்த பிரச்சனையும் இல்லை.

15. **திரு.வெள்ளயங்கிரி பாலத்துறை :**

நான் பாலத்துறையிலிருந்து வருகிறேன். இந்த கல் குவாரி இயங்காததனால் தொகுப்பு வீடுகள் கட்டுவது முக்கியமாக பாதிக்கப்படுகிறது. அவர்களெல்லாம் ஒரு நேர்மையான குடும்பத்தை சேர்ந்தவர்கள் கிட்டதட்ட ஒரு அறுபது எழுபது வருடமா வந்து எந்த பிரதி பலனும் இல்லாமல் ஏழைகளுக்காக தொகுப்பு

17

வீடுகள் கட்டுவதற்கு பொருட்கள் இலவசமாகவே கொடுக்கிறார்கள். இங்கு மட்டுமல்ல மதுக்கரை ஒன்றியத்திலுள்ள கோவில், குளம் , தொகுப்பு வீடுகள் எங்கு கட்டினாலுமே போய் கேட்டோம் என்றால் அவர்கள் இலவசமாகவே செய்து கொடுக்கிறார்கள். அதற்க்குண்டான மூலப்பொருட்கள் எல்லாமே கொடுக்கிறார்கள். அதனால் அவர்களுக்கெல்லாம் எந்த பாதிப்புக்கு இல்லாமல் அந்த தொழில் இயங்குகிற மாதிரி பண்ணி கொடுக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல் ஆகியவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

கூட்ட முடிவில் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்கள் பேசும் போது இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி கொடுத்த மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்த பொது மக்கள் மற்றும் காவல் துறை அலுவலர்கள் அனைவருக்கும் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட சுற்று சூழல் பொறியாளர் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொண்டு கூட்டத்தை முடித்து வைத்தார். அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

மனுக்களின் எண்ணிக்கை : 8

3/6/25

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**கோயம்புத்தூர் தெற்கு.**

03/06/2025

**தனி மாவட்ட வருவாய் அலுவலர்,**
**(நிலம் எடுப்பு) மாநில நெடுஞ்சாலை**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**